அமைச்சர் ராஜகண்ணப்பன் - காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

புதிய காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான துவக்க விழா!

இராமநாதபுரத்தில் அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார்!

இராமநாதபுரம், மே 29-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (27.05.2023) அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் துறையின் மூலம் புதிய காவிரி கூட்டு குடிநீர் திட்டத்திற்கான துவக்க விழா மற்றும் பேரூராட்சிகள் நிர்வாக துறையின் மூலம் முடிக்கப்பட்ட திட்டப்பணிகளுக்கான துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்விழாவில் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஷிவ்தாஸ் மீனா, இயக்குநர், நகராட்சி நிர்வாகம் பா.பொன்னையா, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வ.தட்சிணா மூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர், கிரண் குராலா, மாவட்ட ஆட்சித் தலைவர் பா.விஷ்ணு சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் தலைமையேற்று புதிய திட்ட பணிகளுக்கான துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

அமைச்சர் கே.என்.நேரு பேச்சு

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு புதிய காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தில் ரூபாய் 2819.78 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளவுள்ள பணிகளை துவக்கி வைத்தும், சாயல்குடி பேரூராட்சியில் ரூ.191.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வாரச்சந்தை வளாக கட்டடத்தை திறந்து வைத்து பேசுகையில்,

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஜல்ஜீவன் திட்டத்தின் இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 2306 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.2819.78 கோடி மதிப்பீட்டில் புதிய காவிரி கூட்டு குடிநீர் திட்டத்திற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் மேற்கொண்டு பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் முழுமையாக வழங்கப்படும்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது திருச்சி காவிரி ஆற்றிலிருந்து இராமநாதபுரம் பகுதிக்கு குடிநீர் வழங்க பணிகள் மேற்கொண்டு பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டது. அப்பொழுது பொருத்தப்பட்ட தண்ணீர் இணைப்பு குழாய்கள் பல ஆண்டுகள் ஆனதால் ஆங்காங்கே ஏற்பட்ட பாதிப்புகளை சீர் செய்து தண்ணீர் கொண்டு வருவதால் முழுமையாக தண்ணீர் கொண்டு வர முடியாத நிலையில் 5 கோடி லிட்டர் தண்ணீர் மட்டுமே வந்து கொண்டிருக்கிறது. பொதுவாக 7 கோடி லிட்டர் தண்ணீர் இப்பகுதிக்கு வர வேண்டும். போதியளவு தண்ணீர் கிடைக்காததை கருத்தில் கொண்டு தற்பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு காவிரி ஆற்றிலிருந்து கொண்டு வரக்கூடிய இணைப்பு குழாய்களை சீரமைக்க ரூ.555 கோடி ஒதுக்கீடு செய்து மறு சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி முடிந்ததும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தண்ணீர் முழுமையாக வந்து சேரும்.

பொதுவாக இப்பகுதிக்கு குடிநீருக்கான வேறு எந்த ஆதாரமும் இல்லை என்பதை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் தனித்திட்டமாக இத்திட்டத்தை துவக்கி கரூர் மாவட்டம், நஞ்சை புகழூரிலிருந்து காவிரி குடிநீர் கொண்டு வருவதற்கான பணிகளை மேற்கொள்ள திட்டம் இன்று துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவுற்றதும் மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் போதியளவு காவிரி கூட்டுக் குடிநீர் கிடைக்க பெறும்.

மேலும் தற்பொழுது நகராட்சி, பேரூராட்சிகளில் குடிநீர் ஓரளவு சீராக வழங்கப்படுகிறது. தண்ணீர் கிடைக்காத பகுதிக்கு லாரிகளில் இருந்து குடிநீர் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் 10 மாவட்டங்களில் குடிநீர் தேவையை நிறைவேற்ற ரூ.10,500 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கி பணிகள் நடைபெறுகிறது. ஜல்ஜீவன் திட்டத்தை முதன் முதலில் தமிழகத்திற்கு கொண்டு வந்த பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. அதனை அடுத்து குடிநீர் திட்டப்பணிகளுக்கு சிறப்பு கவனம் எடுத்து செயல்பட்டு தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றியவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே.

இராமநாதபுரம் மாவட்டத்தை பொருத்தவரை கடந்த 2 ஆண்டுகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துறையின் மூலம் ரூ.2686.59 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 4 நகராட்சிகளில் ரூ.127.02 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகளும், 7 பேரூராட்சிகளில் ரூ.57.93 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்டப்பணிகளும் நடைபெற்றுள்ளது. ஆக மொத்தம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.2871.54 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு பொதுமக்களின் தேவையை உணர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இது மட்டுமின்றி அரசின் பல்வேறு திட்டங்கள் பொதுமக்களின் வளர்ச்சிக்காக செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் பயன்பெற்றிட வேண்டுமென நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தார்.

அமைச்சர் ராஜ கண்ணப்பன் பேச்சு

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று 2 ஆண்டுகளில் மக்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என்ற குறிக்கோளுடன் மக்களோடு மக்களாக நான் இருந்தேன் மக்களோடு மக்களாக நான் இணைந்தேன் மக்களுக்காக பணிகளை ஆற்றினேன் என்ற உயிர் மூச்சாக மக்களோடு வாழ்ந்து வரும் நம் முதலமைச்சராக அவர்கள் தலைவராகவும் தலைசிறந்த முதல்வராகவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருந்து வருகிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் முன்னேறிய மாவட்டங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. இதற்கு அடித்தளமாக இந்தப் பகுதிக்கு முதன்முதலாக காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் அமைத்து பொதுமக்களுக்கான குடிநீர் தேவையை நிறைவேற்றியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், அதனைத் தொடர்ந்து தற்பொழுது இராமநாதபுரம் மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை முழுமையாக நிறைவேற்றித் தர நம் முதல்வரிடம் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்று இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் கரூர் மாவட்டம், நஞ்சை புகலூர் காவிரி ஆற்றுப்பகுதியிலிருந்து தனித்திட்டமாக பைப்லைன் பொருத்தப்பட்டு மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதி மக்களுக்கும் குடிதண்ணீர் வழங்கும் வகையில் பணிகள் துவங்க உள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று ரூ.2819.78 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தில் ரூ.2819.78 கோடி மதிப்பீட்டில் திட்டத்தையும், சாயல்குடி பேரூராட்சியில் ரூ.191.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வாரச்சந்தை கட்டடத்தையும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு வாய்ந்த திட்டத்தை அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த திட்டத்தின் மூலம் கண்டிப்பாக அனைத்து கிராமத்திற்கும் குடிநீர் சீராக கிடைத்திடும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளான குடிநீர் போக்குவரத்து சாலைகள் போன்ற அனைத்தும் சீராக கிடைத்திடும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தியாவில் 23ம் இடத்திலிருந்த குடிநீர் வடிகால் வாரியத்துறை தற்போது முதலாம் இடத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தளபதியார் அவர்களின் பொற்கால ஆட்சியில் குடிநீர் வடிகால் வாரியத்துறையை முதலாம் இடத்திற்கு கொண்டு வந்த நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியை தெரிவித்து கொள்கிறோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பது போல் மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள். மக்களுக்காக நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். அனைவரும் ஒன்று கூடி முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்திடுவோம் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக அவைத் தலைவர் வி. சத்தியமூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முருகவேல், முத்துராம லிங்கம், முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் சுப.த. திவாகர்,மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் பெருநாழி வி.போஸ், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் நல்ல சேதுபதி,கமுதி வடக்கு ஒன்றிய செயலாளர் வி.வாசுதேவன், இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர் கே கார் மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம்,பரமக்குடி மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, போகலூர் ஒன்றிய செயலாளர் கே. கதிரவன், குணசேகரன், முதுகுளத்தூர் பூபதி மணி, கடலாடி ஆப்பனூர் ஆறுமுகவேல். ஜெயபால், மண்டபம் கே .ஜே .பிரவீன், முத்துக்குமார், ஆர் எஸ். மங்கலம் கண்ணன், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கே. ஜே. பிரவீன்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு உதவி ஆட்சியர் (பயிற்சி) நாராயண சர்மா, மண்டபம் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர், சுப்பு லெட்சுமி ஜீவானந்தம், தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வெ.ரகுபதி, கண்காணிப்பு பொறியாளர் (பேரூராட்சிகள்) எம்.திருமாவளவன் மற்றும் மாநில மாவட்ட நகர ஒன்றிய கிளைக் கழக பொறுப்பாளர்கள் கட்சித் தொண்டர்கள் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

நெல்லை மத்திய மாவட்டத்தில் திருவுருவச்சிலை அமைக்க முடிவு!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! டி.பி.எம்.மைதீன்கான் அறிவிப்பு

நெல்லை.மே29-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் நெல்லை சந்திப்பு ஆர்.கே.வி.திருமண மஹாலில் வைத்து நெல்லை மத்திய மாவட்ட அவை தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் நிகழ்வை மிகசிறப்பாக கொண்டாட வேண்டும். என கூறினார். நெல்லை நகரின் மைய பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலை அமைக்க வேண்டும்.என்றும் இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் நெல்லை சந்திப்பு ஆர்.கே.வி.திருமண மஹாலில் மாவட்ட அவை தலைவர் பி.கே.முருகன் தலைமையில் மாநில மகளிர் அணி செயலாளர் பாளை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர்,நெல்லை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ் தீர்மானங்களை வாசித்தார்.மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

பின்னர் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் ஆலோசனைகளை வழங்கி பேசினார்.

நிகழ்வில் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், தலைமை தீர்மான குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன்,பேச்சிபாண்டியன், மாவட்ட துணை செயலாளர் தர்மன், மாவட்ட பொருளாளர் வண்ணை சேகர்,பொதுக் குழு உறுப்பினர்கள் மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ், நடராஜன்,ராஜேஸ்வரி,மாநகர நிர்வாகிகள் அப்துல்கையூம், சுதா மூர்த்தி,மூளிக்குளம் பிரபு, அண்ணாமலை,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை)துபை சாகுல் (மேலப்பாளையம்)அன்டன்செல்லதுரை (பாளை) நமச்சிவாயம் (நெல்லை)

ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி, மாரியப்பன், அன்பழகன், முருகன், பேரூர் செயலாளர்கள் செல்வபாபு,பேச்சிமுத்து,மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பு சாமி கோட்டையப்பன்,மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணிஅமைப்பாளர் தினேஷ், சங்கரலிங்கம்,நவ்ஷாத், உட்பட ஒன்றிய கழக, பகுதி கழக,பேரூர் கழக,கிளை கழக, உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழக முன்னோடிகள், கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

நெல்லை மத்திய மாவட்ட கழக பொறுப்பாளராக முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் அவர்களை நியமனம் செய்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் கழக பொதுசெயலாளர் அவர்களுக்கும், கழக பொருளாளர் அவர்களுக்கும், மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களுக்கும், இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இந்திய திருநாட்டின் குடியரசு தலைவர்களையும்,துணை குடியரசு தகவர்களையும், பிரதமர்களையும் பலமுறை உருவாக்கி தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்ல இந்திய அரசியலின் திசையை தீர்மானிப்பவராக திகழ்ந்த முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞருடைய நூற்றாண்டு விழாவை தலைமை கழக அறிவிப்புக்கு இணங்க நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர கழக,ஒன்றிய கழக பகுதிக் கழக,பேரூர் கழக,வட்டக் கழக,ஊராட்சிக் கழக பகுதிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன் 3ஆம் தேதி முதல் ஓராண்டுக்கு அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதலமைச்சராக இருந்து தமிழ்நாடு மக்களுக்கு ஆற்றிய பணிகளையும் கலைஞர் வழியில் ஆட்சி செய்யும் கழகத் தலைவர் திராவிட மாடல் முதலமைச்சர் தளபதியாரின் ஈடில்லா இரண்டு ஆண்டு கால ஆட்சியின் சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கின்ற பணியை சிறப்பாக செய்திட மாநகர,ஒன்றிய, பகுதி, பேரூர்,வட்டகழக செயலாளர்களை கேட்டுக் கொள்வதோடு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திட இக்கூட்டம் ஒருமனதாகதீர்மானிக்கிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெல்லை நகரின் மையப்பகுதியான அரவிந்த் கண் மருத்துவமனை அருகில் கழகத்திற்கு சொந்தமான இடத்தின் முகப்பு பகுதியில் தலைமை கழக அனுமதி பெற்று முத்தமிழ் அறிஞர் கலைஞரின் முழு உருவ வெண்கலசிலை அமைப்பது என இக்கூட்டம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட நெல்லை மற்றும் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாநகர,ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழகம் மற்றும் ஊராட்சி பகுதியில் கழக உறுப்பினர் சேர்க்கும் பணியை தீவிர படுத்திடவும், நெல்லை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், ஆகியோரின் ஆலோசனைப்படி மேற்கண்ட பணிகள் துரிதமாக முடித்து மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க மாநகர, ஒன்றிய,பகுதி,பேரூர்,வட்டக் கழக செயலாளர்களை கேட்டுக் கொள்வதோடு உறுப்பினர் படிவம் தேவைப்படுபவர் மாவட்ட கழகத்தில் பெற்றுக் கொள்ளவும் வேண்டிக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

புல்லட் ரயில்களுக்கு இணையான ரயில் சேவை

இந்தியாவிலும் பயன்பாட்டுக்கு வரவேண்டும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளைப் பதிவு!

டோக்கியோ, மே 29-

ஒசாகாவிலிருந்து டோக்கியோ நகருக்கு புல்லட் இரயில் மூலம் புறப்பட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதுகுறித்து வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

ஒசாகா நகரிலிருந்து டோக்கியோவுக்கு புல்லட் இரயிலில் பயணம் செய்கிறேன். ஏறத்தாழ 500 கி.மீ தூரத்தை இரண்டரை மணிநேரத்திற்குள் அடைந்து விடுவோம்.

உருவமைப்பில் மட்டுமல்லாமல் வேகத்திலும் தரத்திலும் புல்லட் ரயில்களுக்கு இணையான இரயில் சேவை நமது இந்தியாவிலும் பயன்பாட்டுக்கு வர வேண்டும்; ஏழை எளிய நடுத்தர மக்கள் பயனடைந்து, அவர்களது பயணங்கள் எளிதாக வேண்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வந்தவாசி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில்

அரசின் ஈராண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

எம்.எஸ்.தரணிவேந்தன் சிறப்புரை! எஸ்.அம்பேத்குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

வந்தவாசி, மே 29-

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி தொகுதிக்குட்பட்ட புன்னை, மருதாடு, தெள்ளார், தேசூர் என பல பகுதிகளில் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் வெளிநாட்டு பயணத்தால் ஆறு ஆயிரம் கோடி முதலீடு தமிழ்நாட்டுக்கு வர வைக்கப்பட்டு நேரடியாக 15 ஆயிரம் வேலை வாய்ப்பும் 30 ஆயிரம் மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு திட்டத்தை கொண்டு வந்துள்ளார் என்று அரசின் சாதனைகளை பட்டிலிட்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், தலைமை கழக பேச்சாளர் குடியாத்தம் பாரி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எவரெஸ்ட் என். நரேஷ் குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம்.சி.வெங்கடேசன், சி.இராம்மோகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாண்டுரங்கன், ஒன்றிய செயலாளர்கள் டி.டி ராதா, ப.இளங்கோவன், கே.ஆர்.பி.பழனி, சி.ஆர். பெருமாள், நகர மன்ற தலைவர் எச்.ஜலால், நகர மன்ற துணைத் தலைவர் க.சீனிவாசன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எம்.சி.சந்திரன், இளைஞர் அணி பொறுப்பாளர்கள் இ.எஸ். டி.கார்த்திகேயன், யுவராஜ், மதன்குமார், முத்து, ஊராட்சி மன்ற தலைவர் தனபால்,

ஒன்றிய அவை தலைவர் பிலோமினாராஜா, துணைத் தலைவர் சுதா, பொறியாளர் அணி அமைப்பாளர் யுவராஜ், ஒன்றிய தொண்டர் அணி துணை அமைப்பாளர் உமாபதி, மாவட்ட பிரதிநிதிகள் எம்.டி.இப்ராஹிம் ஷா, எஸ். சச்சிதானந்தம், ஆதிகேசவன், ரமேஷ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கார்த்திக், சீனிவாசன், ஒன்றிய பொருளாளர் எம்.ஜி.ரமேஷ், ஒன்றிய துணை செயலாளர்கள் மேகநாதன், சரஸ்வதிநாகராஜன், நகர மன்ற உறுப்பினர்கள் அன்பரசு, ரிஹானாகரீம் உள்ளிட்ட கழக ஒன்றிய செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள்,நகர செயலாளர்கள் கழகத் தொண்டர்கள் என பல இடங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

திருப்போரூர் வடக்கு ஒன்றியக் கூட்டம்!

திருப்போரூர், மே 29–

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.திருப்போரூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, ஒன்றிய பெருந்தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஒன்றியச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெற்றது. உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்பு சொழியன், திருப்போரூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் பரிதிஇளம்சுருதி எம்.சி, ஒன்றிய துணை செயலாளர்கள் எல்.ஜெயபால், ஏ.ரமேஷ், ஒன்றியப் பொருளாளர் எஸ்.ராமகிருஷ்ணன், மாவட்டப் பிரிதிநிதி என்.ஜி.கெஜராஜன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஆர்.கோவிந்து, வீ.விஜயகுமார், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஒழுங்கு நடவடிக்கை

தலைமைக் கழக அறிவிப்பு

திருச்சி வடக்கு மாவட்டம், துறையூர் மத்திய ஒன்றியம், நரசிங்கபுரம் ஊராட்சியைச் சேர்ந்த மகேஸ்வரன், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 28.5.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருமதி தையல்நாயகி முத்துசாமி
மே 29 (2001)

சென்னை, துறைமுகம் பகுதிக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் – சிவகங்கை மாவட்டக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் – பானை உடைப்புப்போராட்டம் – நீதிகேட்டு நெடும் பயணம் போன்ற கழகம் நடத்திய போராட்டங்களில் பங்கேற்றவர்.

பால்கமிஷன் அறிக்கை தொடர்பாக தலைவரை அவரது இல்லத்தில் கைது செய்ய முற்பட்டபோது, காவல்துறை வாகனம் முன்பு படுத்து மறியல் செய்து, தடியடிக்கு ஆளாகி மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டவர்.

இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட நிலையில் காரைக்குடியில் சித.சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஈழத் தமிழர் ஆதரவு ரயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.